सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सूक्वार, 26 ऐपरल 1996 / 1918 शक

New Delhi, Friday, 26th April 1996

*புது தில்லி, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் தேதி, வெள்ளிக்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 26th April 1996

***சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்***

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 26, ஏப்ரல் 1996*

The translation in Tamil of the Destruction of Records Act, 1917 (5 of 1917), The Haj Committee Act, 1959 (51 of 1959), The National Highways Act, 1956 (48 of 1956), The Armed Forces (Emergency Duties) Act, 1947 (15 of 1947), The Copy Rights Act, 1957 (14 of 1957), The Muslim Women (Protection of Rights of Divorce) Act, 1986 (25 of 1986), The Bankers' Books Evidence Act, 1891 (18 of 1891), The Antiquities and Art Treasures Act, 1972 (52 of 1972), The Bonded Labour System (Abolition) Act, 1976 (19 of 1976), The Interest Act, 1978 (14 of 1978), The Disputed Elections (Prime Minister and Speaker) Act, 1977 (16 of 1977) are hereby Published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பதிவணங்களை அழித்தல் சட்டம், 1917 (5/1917), ஹஜ்குழுச் சட்டம், 1959 (51/1959), தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956 (48/1956), ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக்கடமைகள்) சட்டம், 1947 (15/1947), பதிப்புரிமைச் சட்டம், 1957 (14/1957), முஸ்லிம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 1986 (25/1986), வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம், 1891 (18/1891), தொல்பொருள்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம், 1972 (52/1972), கொத்தடிமை வேலைமுறை (ஒழிப்புச்) சட்டம், 1976 (19/1976), வட்டிச் சட்டம், 1978 (14/1978), மறுத்து வாதிடப்படும் (தலைமை அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர்) தேர்தல்கள் சட்டம், 1977 (16/1977) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு(அ)வின்படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

**PRICE: Rs. 60.00**

## ஆயுதப்படையினர் (நெருக்கடிநிலைக் கடமைகள்) சட்டம், 1947

(சட்ட எண் 15/1947)

[1947, மார்ச் 20]

ஒரு நெருக்கடிநிலையில், இன்றியமையாப்பணிகள் தொடர்பாக ஆயுதப் படையினருக்குச் சுமத்தப்படவேண்டிய கடமைகளை ஆற்றுவதற்கானதொரு சட்டம்.

நெருக்கடிநிலையில் இன்றியமையாப் பணிகள் தொடர்பாக [1][* * * ] ஆயுதப்படையினருக்குச் சுமத்தப்படவேண்டிய கடமைகளை ஆற்றுவது உகந்ததாயிருப்பதால்,

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

**குறுந்தலைப்பும் அளாவுகையும்.**

1. [2][* * ] இந்தச் சட்டம், ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக கடமைகள்) சட்டம், 1947 என்று வழங்கப்பெறும்.

[2][ * * * * * ]

**ஆயுதப் படையினரின் நெருக்கடிநிலைக் கடமைகள்.**

2. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, [3][ஒரு மாநிலத்தில்] குறித்துரைக்கப்பட்ட பணி எதையும், பொதுமக்களுக்கான இன்றியமையாத சிறப்புடைய பணியாக விளம்புகை செய்யலாம் :

வரம்புரையாக : அத்தகைய அறிவிக்கை முதல்நேர்வில் ஒரு மாதத்திற்குச் செல்லாற்றலில் இருத்தல் வேண்டும், ஆனால், அதே போன்ற அறிவிக்கை மூலம் அப்போதைக்கு நீட்டிக்கப்படலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி விளம்புகை ஒன்று செய்யப்படுவதன்பேரில் மற்றும் விளம்புகையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணியின் பேரிலான அல்லது அதன் தொடர்பான வேலையமர்த்தம் குறித்து உயர் அலுவலர் எவராலும் வழங்கப்பட்ட ஆணை எதற்கும் கீழ்ப்படிவது [4][தரைப்படைச் சட்டம், 1950 அல்லது வான்படைச் சட்டம், 1950க்கு] அல்லது [5][* * * *] [6][கடற்படைச் சட்டம், 1957இக்கு] உட்பட்ட நபர் ஒவ்வொருவரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

மற்றும் மேற்சொன்ன சட்டங்களின் பொருளின்படியும் அவற்றின் நோக்கங் களுக்காகவும், அத்தகைய ஆணை ஒவ்வொன்றும் சட்டப்படியான ஆணையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**குறித்த சில கடந்தகால ஆணைகளைச் செல்லுந்தன்மையுடையன வாக்குதல்.**

3. 1946 செப்டம்பர் 30ஆம் நாளுக்குப் பின்பு, மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, இதற்கென மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் பணி ஏதொன்றின் பேரிலான அல்லது அதன் தொடர்பான வேலையமர்த்தம் குறித்து உயர் அலுவலர் எவராலும், பிரிவு 2இன் உட்பிரிவு (2)இல் சுட்டப்பட்டுள்ள நபர் எவரொருவருக்கும் வழங்கப்பட்ட ஆணை, இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள சட்டங்களின் பொருளின் படியும் அவற்றின் நோக்கங்களுக்காகவும், சட்டப்படியான ஆணையாகக் கொள்ளப்படுதல் வேண்டும் , எனினும் அத்தகைய நபர் எவரும், அத்தகைய ஆணை எதற்கும் அவர் கீழ்ப்படியாதிருந்திருக்கிறார் என்ற காரணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படுதல் ஆகாது.

---

1. சட்டங்கள் இணக்க ஆணை, 1950இனால் " முடியரசின் " என்ற சொற்கள் விட்டுவிடப் பட்டன.
2. ஆயுதப்படையினர் (நெருக்கடிநிலைக் கடமைகள்) சட்டம், 1948இன் (4/1948) பிரிவு 2இனால் '(1)' என்ற அடைப்புக் குறிகளும் எண்ணும் மற்றும் உட்பிரிவு (2)ம் விட்டுவிடப்பட்டன (5-1-1948).
3. பகுதி (ஆ) மாநிலங்கள் (செய்சட்டங்கள்) சட்டம், 1951இன் (3/1951) பிரிவு 3 இனாலும் இணைப்புப்பட்டியலினாலும், "பகுதி (அ) மாநிலம் அல்லது பகுதி (இ) மாநிலத்தில் அல்லது பகுதி (ஆ) மாநில அரசாங்கத்தால் அவ்வாறு வேண்டுறுதப்பட்டால், மாநிலத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணி எதுவும் " என்ற சொற்களுக்கு மாற்றாகஅமைக்கப் பட்டன (1-4-1951).
4. பகுதி (ஆ) மாநிலங்கள் (செய்சட்டங்கள்) சட்டம், 1951இன் (3/1951) பிரிவு 3 இனாலும் இணைப்புப்பட்டியலினாலும் " இந்தியத் தரைப்படைச் சட்டம், 1911 அல்லது இந்திய வான்படைச் சட்டம், 1932 " என்ற சொற்கள், மற்றும் எண்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டன.
5. " முதலாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்ட படிவத்தில் உள்ள கடற்படைக் கட்டுப் பாட்டுச் சட்டம், " என்ற சொற்கள், சட்டங்கள், இணக்க ஆணை, 1950 இனால் விட்டுவிடப்பட்டன.
6. "இந்தியக்கடற்படை (கட்டுப்பாடு)ச் சட்டம், 1934 " என்ற சொற்கள் நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1960இன் (58/1960) பிரிவு 3 இனாலும் இணைப்புப் பட்டியல் II இனாலும் மாற்றாக அமைக்கப்பட்டன (26-12-1960).